RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI:10.34256/ irjt22417

# ஒளி ஏற்றா மாடங்களாகும் பள்ளி விழுமியங்கள்

**சி. சண்முகவடிவு [அ, *]**

[அ] தமிழ்த்துறை, எம்.ஜி.ஆர். கலைக்கல்லூரி, (பெரியார் பல்கலைக்கழகத்துடன் இணைவுப் பெற்றது) சேலம்-636011, தமிழ்நாடு, இந்தியா

# School Values that are Light-Resistant Niches

**S. Shanmugavadivu [a, *]**

[a] Department of Tamil, M.G.R. Arts College, (Affiliated to Periyar University), Salem-636011, Tamil Nadu, India

* Corresponding Author:
ssvel81@yahoo.com

Received: 29-03-2022
Revised: 02-09-2022
Accepted: 18-09-2022
Published: 11-10-2022

Check for updates

**ABSTRACT**

Value education in school means developing good qualities and good behavioural changes in human beings. Schools are not isolated in society, and violence in school is an extension of violence against children in society. It includes many components such as human development, individual development, social development, cultural development in the individual, etc. In any case, all human values are related to each person individually. They are living in an insecure society in an environment where all individual moral values have collapsed at a time when individual crimes have increased. In this context, teachers seek to make students aware of higher education, the new economy, the superiority of labour, feminism, the children's world, the lost values, the complexities of human relationships, and the difference between living and existing.

**Keywords:** Education, Feminism, Relationships, Development

## முன்னுரை

பள்ளியில் விழுமியக்கல்வி என்பது நல்ல பண்புகளை மனிதனிடம் நல்ல நடத்தை மாற்றங்களை உருவாக்குதல் என்று பொருள்படும். சமூகத்தில் பள்ளிகள் தனித்து இருப்பதில்லை, பள்ளியில் நிகழும் வன்செயல்கள் சமூகத்தில் நிகழும் குழந்தைகள் மீதான வன்முறையின் ஒரு நீட்சியாகவே இருக்கின்றது. மனிதனின் வளர்ச்சி, தனி மனித முன்னேற்றம், சமூகம் சார்ந்த வளர்ச்சி, தனிமனிதனில் ஏற்படும் கலாச்சார வளர்ச்சி போன்ற பல உட்கூறுகள் இதில் அடங்கும். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் எல்லா மனித விழுமியங்களும் ஒவ்வொரு நபர்களுடன் தனித்தனியாக தொடர்புடையவையாக இருக்கின்றன.

தனிநபரின் குற்றங்கள் பெருகிவிட்ட காலக்கட்டத்தில் தனிப்பட்ட அற விழுமியங்கள் எல்லாம் சரிந்துவிட்ட சூழலில் பாதுகாப்பில்லாத சமூகத்தில் வாழ்ந்து வருகின்றனர். இச்சூழலில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு உயர்கல்வி, புதிய பொருளாதாரம், உழைப்பின் மேன்மை, பெண்ணியம், குழந்தைகள் உலகம், தொலைந்துபோன விழுமியங்கள், மனித உறவுகச்ளின் சிக்கல்கள், வாழ்வதற்கும் இருப்பதற்குமான வேறுபாடு பற்றி ஒவ்வொரு ஆசிரியரும் அறிந்து கொள்ள வேண்டும் என்பதை எடுத்துரைக்க முற்படுகின்றது.

## பள்ளி விழுமியங்கள் - அகராதி விளக்கம்

லிப்கோ அகராதி - “விழுமம், விழுமிய என்பதன் பொருள் சிறப்பு, சீர்மை, துன்பம் என்று விளக்கப்படுகின்றது. மதுரைப்பேரகராதியில் விழுமியம், விழுமியோர், முதலான விளக்கங்கள்

அமைந்துள்ளன. விழுமம் - இடும்பை, சிறப்பு, சீர்மை, நன்மை விழுமிய - சிறந்த உசித, மேன்மையான, அரிய சீரிய விழுமியர். விழுமியோர் - சிறந்தோர், பெரியோர். இரா. பாலகிருஷ்ண முதலியார் எழுதிய தமிழ் ஆங்கில அகராதியில் விழுமிய என்ற சொல்லுக்கு நன்றாகத் தெளியக்கூடிய (Prominent) மிகச் சிறந்த மேம்பட்ட முதல் தரமான என்று குறிக்கப்பட்டுள்ளது. தமிழிலக்கிய அகராதி - விழுப்பம் - சிறப்பு, சீர்மை, நன்மை, மேன்மை, உயர்வு விழுப்பகை - பெரும்பகை, விழுப்பொருள் - மேலானப்பொருள். பவானந்தர் தமிழ்ச் சொல்லகராதி "விழு - சிறப்பு என்றும், இயம் - சொல் என்றும் பொருள் கூறுகின்றது. இதன்மூலம் விழுமியம் என்பதற்கு சிறப்புச்சொல் என்று அகராதி பொருள் கூறுகின்றது (Lifco, 2010).

லிப்கோ அகராதியில் பள்ளி - பள்ளிக்கூடம், அறச்சாலை, கல்வி பயிலிடம்6 தமிழ் அகராதி - கல்வி கற்குமிடம் அறை, அறச்சாலை, இடைச்சேரி, சமண பௌத்தக் கோவில், பள்ளிவாசல்7. மாணாக்கண் - படிக்கும் சீடன், ஆசான் - உபாத்தியாயன், குடும்ப குரு, ஆசிரியன் - மதகுரு, நூலாசிரியன் (Lifco, 2010).

## ஆசிரியர் பற்றி அறிஞர்களின் கூற்று

"தனது ஒட்டுமொத்த இலக்கிய ரசனையின் தோற்றுவாய் தனது ஆசிரியரே என சத்யா ஜித் ரே" கூறுகின்றார். "சாந்தி நிகேதனில் தனது தோள்பையிலிருந்து ஆசிரியர் புத்தகங்களை எடுக்கும் அந்த நிமிடத்திற்காக மணிக்கணக்கில் காத்திருப்போம் என அமர்த்தியா சென் குறிப்பிடுகின்றார். வீட்டிற்கு ஒரு நூலகமும் அமைக்க வேண்டும் என்கிறார் அண்ணா"12 கல்வியின் சிறப்பு குறித்து ஒரு நூலகம் அமைக்க வேண்டும் என்று கூறுகின்றார்.

## தொல்காப்பியத்தில் விழுமியம்

எப்பொருளை விளக்க முற்பட்டாலும் முதலில் தொல்காப்பியத்தில் காணப்படும் விளக்கத்தினை எடுத்துக்காட்டுவர். தொல்காப்பியத்தில் 55ம் பாடலில் சீர்மை, சிறப்பு, இடும்பை என்பவை விழுமம் என்பதன் பொருள் நிலைகளாகும்.

"விழுமம் சீர்மையும், சிறப்பும், இடும்பையும்"

இளம்பூரணர் உரை "விழுமியோர் என்றக்கால் சீரியர் என்பதாம்" என்கிறார் (Ilampuranar, 2005).

## புறநானூற்றில் கல்வியும் விழுமியமும்

சங்க இலக்கியங்களுள் ஒன்றான புறநானூற்றில் 78 ம் பாடலில் விழுமியம் என்ற தொடர் இடம்பெற்றுள்ளது. "மலைப்பருு மலை மதியார் சிலைத்தெழுந்து விழுமியம் பெரியம் யாமே"14 என்று குறிப்பிட்டுள்ளது. கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே15 35 ம் பாடலில் என்று வெற்றி வேற்கையின் ஆசிரியர் அதிவீரராம பாண்டியர் குறிப்பிட்டுள்ளார்.

## திருக்குறளில் கல்வியும் விழுமியமும்

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய திருக்குறளில் கல்வி என்ற அதிகாரத்தில் கல்வியின் சிறப்பை விளக்குகிறது. விழுமியம் என்பதற்கு மேன்மை என்ற பொருளில் வழங்கி விளக்கமளிக்கின்றது.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லா தவர்16. கண்ணுடையார் என்பவர் கற்றோராகவும். கல்லாதவர் புண்ணுடையவராகவும் இருப்பதாக குறிப்பிட்டுள்ளது. ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும். ஒழுக்கம் உயிரைவிட மேலானதாக கருதப்படுகிறது (Parimelalhagar, 2019).

## சமூக மதிப்பாகும் பள்ளிகள்

"உயர்ந்த புகழ் ஒரு சிறந்த விழுமியமாகும்" அவர்கள் கூறியுள்ளார். இச்சூழலில் மதிப்புகள் சமூக வாழ்வில் சமூக உறுப்பினர்களுக்கு இடையே நிலவும் உறவுகளாலும் தொடர்பாலும் உருவாகின்றன. எனவே, உலகில் எவற்றைப் பற்றிய மதிப்புகளும் மாறக்கூடியவை என்பதை விளக்குகின்றது. பள்ளிப்படிப்பினில் மேதைகள் பக்குவம் வந்ததும் ஞானிகள் நல்ல வழிகளை தேடுங்கள் புதிய உலகம் காணுங்கள் என்னும் கண்ணதாசனின் திரைப்பட பாடல் வரிகள் மூலம் மாணவர்களின் சிறப்புகளை அறிய முடிகின்றது.

## ஏணிப்படிகள்

வாழ்க்கை சூழலில் ஏணிப்படிகளாய் ஒவ்வொருவரின் வாழ்விலும் படிகளாய் இருப்பவர்கள் ஆசிரியர்கள். ஆசிரியர்கள் ஒவ்வொருவரிடமும் கொடுத்த களிமண்ணை கொண்டு அழகான சிலையாய் மட்டும் வடிக்கவேண்டும் என்று எண்ணுகின்றனர். சில சூழ்நிலைகளில் அடியாத மாடு படியாது. அடி விழுவது போல் அண்ணன் தம்பி உதவமாட்டார்கள், "மதிப்பெண் குறைந்ததற்கு தம்மிடம் மண்டை குட்டுவாங்கிய மாணவ கூட்டம் பின்னாளில் ஏவுகணை ஏரி பறக்கும்போது உடைந்த நாற்காலிகளில் உட்கார்ந்துகொண்டேன் வாயார வாழ்த்தும் எழுத்தறிவித்த இறைவன்" (Kaviyanpu, 2013).

மதிப்பெண் குறைந்ததற்கு குட்டு வைத்த ஆசிரியர்கள் வாழ்நாள் முழுவதும் சுயநலம் இல்லாமல் பொதுநலன் கருதி வாழ்பவர்கள். ஆசிரியர்கள் பணியை நினைத்தாலே நெகிழ்ந்து போகிறது அனைவரும் கல்வி கற்று வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற பொது எண்ணத்தை வளர்க்கும் ஆசிரியர்களுக்கு நன்றி இன்றைய சூழலில் வளரும் குழந்தைகளும் சரி ஆசிரியர்களும் சரி புதிது புதிதாய் உருவாகிய சட்டத்தை மனதில் கொண்டு பயந்து பயந்து தன்னுடைய ஆசிரியர் பணியை ஒவ்வொரு நாளும் பயணித்து வருகின்றனர். புதிய சட்டத்தை வகுத்துக் கொண்டு இருக்கும் நிலையினை மாற்றி அமைக்க வேண்டும். சமூகத்தில் ஒவ்வொரு ஆசிரியர்களும் புதிய உத்திகளை கையாண்டு ஒவ்வொரு மாணவர்களையும் பிள்ளைகளாகத் தத்து எடுத்து வளர்க்க வேண்டும். மாணவர்களை புண்ணிய நதிகளாக மாற்றும் ஆசிரியர்கள் இச்சமூகத்தில் வலம் வர வேண்டும் என்று கவிஞர் எடுத்துரைக்கிறார்.

## மாடங்களாகும் பள்ளி

ஒரு சமூகத்தில் நடைபெறுகின்ற செயல்களை சரி, தவறு, நல்லது, கெட்டது என தீர்மானிக்கும் இடம் பள்ளிகளாக இருக்கின்றன. பள்ளி என்பது தனிமனிதனின் மனப்பான்மை, சிந்தனைகள் மற்றும் ஒழுக்கலாறுகளை குறிப்பதாகும். சமூக நாகரீக வளர்ச்சிக்கேற்ப மனிதனின் தேவைகள் மாறுகின்றன. ஒரு கட்டத்தின் தேவைகளை நிறைவு செய்யக்கூடிய மதிப்புகளை, இன்னொரு காலக்கட்டத்தில் நிறைவு செய்ய இயலாது என்பதை உணர்த்துகின்றது.

## ஆசிரியருக்கு பெயர் வைத்தல்

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாறாயிரம் நாட்டல், பின்னருள்ள தருமங்கள் யாவும் பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல் அன்ன யாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்றான். இதில் அனைத்திலும் சிறந்தது என்பது ஏழை ஒருவனுக்கு பாடம் சொல்லித் தருதல் ஆகும். எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான் மாணவர்கள் கல் என்றால் ஆசிரியர்கள் சிற்பிகள். இது போன்ற பொன்மொழிகள் ஆசிரியர்களுக்கு புகழ் சேர்க்கின்றன. அப்படிபட்ட ஆசிரியர்களுக்கு மாணவர் வழங்கும் பெயர்களாக "சொட்ட தல கறிச்சட்டி பழையசோறு இன்னும் எத்தனையோ பட்டப் பெயர்களை கார்பன் டை ஆக்சைடாக உள்வாங்கிக்கொண்டு எமக்கு அன்பளிப்பாய் கிடைத்தது ஆக்சிஜன் (Kaviyanpu, 2013).

இன்றைய சமூகத்தில் ஆசிரியரின் பங்கு மிக இன்றியமையாததாக உள்ளது. அடுத்த தலைமுறையினரை பண்பாளராகவும் பொறுப்பாளர்களாகவும் உருவாக்கும் மிக உன்னதமான பணி செய்பவர்கள் ஆசிரியர்களே. மாணவர்களுக்கு முதல் ஆலோசகர் ஆசிரியர். இன்றைய சூழலில் ஆசிரியர்களுக்கு பெயர் வைத்து அவர்களின் மனம் வருத்தமடைவதை ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்கின்றனர். ஆசிரியர் என்றாலே நினைவுக்கு வருவது எளிமையாக பாடம் நடத்தும் விதம் கலகலப்பான பேச்சு போன்ற சிறந்த தன்னலமில்லா சிறப்பினை உடைய ஆசிரியரின் பெருமை என்றும் பாராட்டுக்குறியதாக இருக்க வேண்டும் என்பதை விளக்குகின்றது.

## கள்ளிப்பழமாகும் பள்ளிகள்

ஒவ்வொரு பெற்றோர்களும் தன்னுடைய ஆசைகளை குழந்தைகளிடம் சேமிக்கின்றன அதற்கு உதாரணமாக இன்றைய சூழலில் பெரிய கல்வி நிறுவனத்தில் படிக்க வைக்க நினைக்கும் பாமர மக்கள் ஒவ்வொருவருக்கும் அதிர்ச்சிஏற்படுகிறது அனைத்து மக்களுக்கும் படிப்பது போல இங்கிலீஷ் பள்ளியில் படிக்க வைத்து தவறு என்பதை, “ஊடு வந்த புள்ள டாடின்னு சொல்லுச்சய்யா! தாய்ப்பாலுக்கு கொடுத்தவள மம்மின்னுசொல்லிச்சய்யா! என்னம்மா புதுசா ஏதேதோ கூப்புடுற! அப்பான்னு சொல்லுன்னு அங்கலாப்பா கேட்டபோது பச்சமண்ணுசொல்லுச்சு “எங்க ஸ்கூல் கேம்பஸ்குள்ள டமில் லபேசக்கூடாது டாடி பேசினா ஃபைன் அத்தான் வீட்லயே பிராக்டீஸ் பண்றேன்” (Kaviyanpu, 2013).

கல்வி அறிவு இல்லாத பெற்றோர்கள் அவர் அவர்களின் குழந்தைகள் அப்பா அம்மா என அழைப்பதை ரசித்த காலம் போய்விட்டது. தமிழில் பேசுவதையே அவமானமாக நினைக்கும் பெற்றோர்கள் பலர். குழந்தைகள் தாய் மொழியில் பேசி புரிந்து கொண்டால் தான் அவர்களுக்கு எளிமையாக இருக்கிறது. இன்றைய சூழலில் கல்வி என்பது வியாபாரமாக மாறி அனைத்து குழந்தைகளுக்கும் ஆங்கில மொழியை திணிக்கின்றனர். தமிழில் பேசினால் அபராதம் விதிக்கும் பள்ளிகள் ஆங்கிலம் கற்றுத் தருவது பள்ளியோடு நிறுத்திவிடாமல் குழந்தையின் தாய் மொழிகளையும் உறவு முறைகளையும் அழைப்பது பற்றியும் கற்றுத் தருகின்றனர் என்பதை கவிஞர் விளக்குகின்றார்.

## தவறு செய்யும் ஆசிரியர்கள்

பள்ளியில் ஏதோ ஒரு சில ஆசிரியர்கள் செய்யும் தவறு அனைத்து ஆசிரியர்களையும் பாதிக்கப்படுகிறது. ஆசிரியர்கள் மாணவர்களின் தவறை திருத்தாமல் மாணவர்கள் ஆசிரியரின் தவறை சுட்டிக்காட்டினால் "நொந்து போய்க் குறிப்பெழுதினார் விடைத்தாளில் எழுத்துப் பிளை அதிகம் திருத்திக் கொல்" (Kaviyanpu, 2013).

மாணவர்களுக்கு கற்றுக் கொடுக்கும் குருவே தவறை எப்போது சரி செய்து கொள்வது. இன்றைய சூழலில் மாணவர்கள் திறமையானவர்களாக விளங்குகின்றனர். அத்திறமையை மாணவர்களுக்கு மென்மேலும் வளர்க்க வேண்டுமே தவிர திறமையை அழித்து விடாமல் பாதுகாக்க வேண்டும் என்கின்றனர். மாணவர்கள் முன்னிலையில் ஒவ்வொரு ஆசிரியரும் கற்று பின் கற்பிக்க வேண்டும். இன்றைய சூழலில் தெருவுக்குத் தெரு பள்ளி என்றாகிவிட்டது. கல்வி என்பதே வியாபாரமாக இருக்கும் இந்த காலத்தில் அதைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியரின் பங்கு முக்கியம் அல்லவா? ஆசிரியர்களாக இருக்கும் திறமை. அதை நாம் ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ளவேண்டும் என்பதை கவிஞர் நினைவுபடுத்துகின்றார்.

## முடிவுரை

“மக்கட் குழுவின் விழுமிய நாகரிக வாழ்க்கைக்குத் துணை செய்பவர் நல்லிசைப் புலவரே” என வெள்ளைவாரணனார் கூறுவதை இங்கு காணமுடிகின்றது. மனிதனும், சமூகமும் எண்ணம், சொல்,

செயல் போன்றவற்றால் வேறுபட்டாலும் தனி மனிதனின் உணர்வுகளும் உணர்ச்சிகளும் சிந்தனைகளும் மேம்பட வேண்டுமாயின் மாடங்களாகும் பள்ளிகளை உருவாக்க வேண்டும். அதற்கிடையே அறிவுத்திறனுக்கு ஏற்றாற்போல் அமைய வேண்டுமாயின் ஒவ்வொருவரும் ஆசிரியரே என்பதை உணர வேண்டும். இவ்வுலகில் நடைபெறும் எந்த ஒன்றும் சமூகத்தை விட்டு அகன்று நிற்பதில்லை. ஒளி ஏற்றா மாடங்களாகும் பள்ளிகள் காலந்தோறும் செய்யப்படும் செயல்களும் மாறிவரும் மாற்றங்களும் சமூகத்தை ஏதோ ஒரு வகையில் பாதிக்கின்றன. இந்நிலை மாற வேண்டுமாயின் பள்ளியில் மட்டும் ஆசிரியர் இருப்பது அல்ல. எந்த ஒரு வேலையையும் கற்றுக் கொடுக்கும் அனைவரும் ஒருவித ஆசிரியர்களே என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

## References

Ilampuranar, (2005) Tholkappiyam Porulathikaram- Ilampuranar Urai, Saradha pathippagam, Chennai, Tamil Nadu, India.

Kaviyanpu, (2013) karaiyil Thudikkum Meengal, Kavya Pathippagam, Chennai, India.

Lifco, (2010) Tamil-Tamil-English Agarathi, Lifco Publications, Chennai, India.

Parimelalhagar, (2019) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Puliyur kesigan, (2005) Purananuru, Pari Nilaiyam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License